(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 28—3—1974, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974 செவ்வாய்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

அடுத்து 1974-75-ம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

6. நடைமுறைக் கேள்வி

ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதற்கான காரணங்களைத் தெரிவிப்பது குறித்து

திரு. எம். ஏ. லத்தீப்: சார், அன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் பிரச்னைகளைச் செய்தித்தாள்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது சில முக்கியமான பிரச்னைகள் அவர்களுக்குத் தோன்றுகின்றன. அதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு

அப்படிப்பட்ட உறுப்பினர்கள் கொண்டுவருகிறார்கள். மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, அதைப்பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்கின்ற அதிகாரம் பேரவைத் தலைவரவர்களுக்கு இருக்கிறது. கொண்டுவருகின்ற பிரச்னைகள் எல்லாம் மன்றத்திலே விவாதிக்கப்பட வேண்டுமென்று யாரும் வற்புறுத்த முடியாது. அந்த எண்ணத்தோடு யாரும் கொண்டுவருவதில்லை. அந்த அடிப்படையிலே நான் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அது முக்கியமானத் தீர்மானமா இல்லையா என்று பேரவைத் தலைவரவர்கள் முடிவுசெய்யும்போது, அதிலே சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் தீர்மானம் கொடுத்த உறுப்பினரை அழைத்து, அதன் முக்கியத்துவம் என்ன என்று கேட்டறிந்து முடிவு செய்யலாம். அப்படிச் செய்யாமல் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டால் அதன் காரணம் என்ன என்பதை உறுப்பினர்கள் அறிந்துகொள்ள ஆவலாக இருப்பார்கள். ஆகவே, அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பதை யாவது தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல முறை இந்த மன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்துவிட்டால், அதைப்பற்றி மீண்டும் இந்த மன்றத்திலே எழுப்பக்கூடாது. மீண்டும் அதையே தான் சொல்கிறேன்.

THIRU M. A. LATHEEF : I am perfectly right in raising the matter. I know the extent and scope of my observation.

நான் சொல்வதெல்லாம், நீங்கள் கொடுத்தத் தீர்ப்பு சரியா தவறு என்பதல்ல. தீர்ப்பு வழங்கும் போது தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன என்பதை அறிந்து தீர்ப்பு வழங்குவது நல்லது என்பதைத்தான் நான் சொல்கிறேன். அதல்லாமல் நீங்களே 'ஆர்பிட்ரரினெஸ்ஸாக' தீர்ப்பு வழங்குவது சரியல்ல. அனுமதி மறுக்கப்படுவதற்கான காரணத்தையாவது தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்வதில்

1974 மார்ச் 20] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அதன் காரணத்தை இந்த அவையிலே கேட்கக்கூடாது; என்னுடைய அறையிலே வந்து கேட்டுக்கொள்ளலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் அளித்த தீர்ப்பைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. பொதுவான ஒரு கருத்தைத் தெரிவிக்கிறேன். கொடுத்தத் தீர்மானம் மறுக்கப்படுகிறது என்றால், அதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் ஒரு பொதுவான கருத்தைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு கொடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தைப்பற்றி மீண்டும் இந்த அவையிலே எழுப்பக் கூடாது, என்று நம்முடைய விதிமுறைகளிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மரபுகளும் அப்படித்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்தமாதிரியான 'இன்னன்டோஸ்' எல்லாம் வேண்டாம். என்னை வழக்கறிஞர் என்று சொல்ல வேண்டாம். என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னால் அந்தப் பிரச்னையைப் பற்றி மீண்டும் இந்த அவையிலே எழுப்பக்கூடாது என்று நம்முடைய விதி முறைகளிலே தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நன்கறிவார்கள். மறுக்கப்பட்டதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் என்னுடைய அறையிலே வந்து கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்; இங்கே கேட்கக்கூடாது. நீங்கள் கேட்பதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: Sir, on a point of order—

Rule 44 clearly says—

"The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated

to the member together with the reason therefor and the member shall not raise the matter as such in the House."

அதனால் நீங்கள் தீர்ப்பு வழங்கும்போது, தீர்மானம் மறுக்கப் பட்டால் அதற்கான காரணத்தோடு மறுக்கப்பட வேண்டும். விதி 44-ல் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி தீர்ப்பு கொடுங்கள். 'I just withhold consent' என்று சொன்னால் விதி 44-க்கு புறம்பாக இருக்கிறது. அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். விதிப்படி நடந்துகொள்ள வேண்டும்; மறுப்பதற்கான காரணத்தை சொல்ல வேண்டும். ஒருவருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதும், இன்னொருவருடைய தீர்மானத்தை மறுப்பதும் எதனால் என்று அப்போதுதான் எங்களுக்குத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே கொடுத்தத் தீர்ப்பைப்பற்றி இந்த மன்றத்திலே மீண்டும் கேட்கக்கூடாது என்று விதி இருக்கிறது. அதன்படி மீண்டும் கேட்கக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: விதி 44-ஐ நீங்கள் மீறியிருக் கிறீர்கள். அதனால் நாங்களும் விதியை மீறவேண்டியிருக்கிறது. நீங்கள் விதிப்படி நடந்துகொண்டால், நாங்களும் விதிப்படி நடந்துகொள்வோம்.

7. 1974-75-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,10,11,83,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்."